**<u>STARTING TIME 11.31 P.M</u>**

## IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.

### O.S. No. 112/2025

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 15.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **மணிகண்டன்** Father's Name :**வெங்கடேசன்**

Address : பஜனை கோவில் தெரு, தகர குப்பம்,
கொண்ட குப்பம் அஞ்சல், சோளிங்கர் தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 25

**<u>மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்ன பரிகாரம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால், தாவா சொத்தில் ஆளுக்கு பாதி பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் பாகம் கேட்கும் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியவில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால், 35 செண்ட் ஆகும். தாவா சொத்தில் எனக்கு எவ்வாறு உரிமையுள்ளதாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், தாவா சொத்து எனது பரம்பரை சொத்தாகும்.

2. தாவா சொத்தை தவிர, பாகம் பிரித்துக் கொள்ள வேண்டிய பரம்பரை சொத்துக்கள் வேறு எதுவும் உள்ளதா என்றால், உள்ளது. அந்த சொத்துக்களின்

சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால், தெரியவில்லை. தாவா சொத்து எத்தனை தலைமுறையாக உள்ளது என்றால், தலைமுறை, தலைமுறையாக உள்ளது.

3. எனது தகப்பனாரின் தந்தை பெயர் ரத்தினம் ரெட்டி என்றால், சரிதான். ரத்தினம் ரெட்டியின் மனைவி பாக்கியம்மாள் உயிருடன் தான் உள்ளார் என்றால், சரிதான். எனது தாத்தா ரத்தின ரெட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால், 4 மகன்கள், இரண்டு மகள்கள் ஆவார்கள். 4 மகன்களின் பெயர் என்னவென்றால், 1) சுப்பிரமணி, 2) மாணிக்கம், 3) மணி மற்றும் எனது தகப்பனார் வெங்கடேசன் ஆகும். மகள்கள் பெயர் என்னவென்றால், ராணி மற்றும் விஜயா ஆகும்.

4. எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்தை எனது தாத்தா ரத்தினம் ரெட்டி எனது தந்தை பெயருக்கு வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் என் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தை, வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் என் தகப்பனார், 1–ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால், சரிதான்.

5. வா.சா.ஆ.2–ஆன 09.09.2016 தேதியிட்ட கிரைய பத்திரம் குறித்து எனக்கு எப்போது தெரியும் என்றால், கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்த 6 மாதத்திற்கு பிறகு தெரிய வந்தது. இன்றுவரை நான், எனது அப்பா, எனது பாட்டி ஆகியோர் ஒரே குடும்பமாக தான் வசித்து வருகிறோம் என்றால், சரியல்ல, என் தகப்பனார் தனியாக வசித்து வருகிறார். நான், எனது அப்பா மற்றும் பாட்டி இன்று வரை ஒன்றாக தான் வசித்து வருகிறோம் என்றும், தனியாக வசித்து வருவதாக வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

6. வா.சா.ஆ.2 கிரையப் பத்திரம் எழுதி வைத்த சமயத்தில் எனக்கு என்ன

வயது என்றால், அப்போது நான் 11–ம் வகுப்பு படித்து வந்தேன். எனது பிறந்த தேதி என்னவென்றால், 23.06.2000–ம் ஆகும். வா.சா.ஆ.2 கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்ததை எதிர்த்து நான் 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

7. தாவா சொத்தில் எனக்கு பாகம் இருப்பது உண்மை என்றால், பரம்பரை சொத்துக்கள் அனைத்தையும் சேர்த்து பாக உரிமையுள்ள அனைவர் மீதும் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால், சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனாரின் தனிப்பட்ட கிரைய சொத்து என்றும், அதை பொறுத்து எந்த வித பரிகாரத்தையும் நான் கேட்க இயலாது என்றால், சரியல்ல. எனவே, தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME: 11.51. A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.09.15 15:13:10 +0530